**செய்தி வெளியீடு எண்: 443** **நாள் : 28.08.2014**

**<u>செய்தி வெளியீடு</u>**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று **(28.8.2014)** தலைமைச் செயலகத்தில், பணியின் போது உயிரிழந்த காவல் துறை உதவி ஆய்வாளர் திரு வி. ரவிச்சந்திரன் அவர்களின் மனைவி திருமதி ஜீவா அவர்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து 5 லட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார்கள்.

சென்னை பெருநகர காவல், திருவேற்காடு காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திரு வி. ரவிச்சந்திரன் அவர்கள் பூந்தமல்லி நெடுஞ்சாலையில் வாகனத் தணிக்கையில் ஈடுபட்டிருந்த போது கண்டெய்னர் லாரி மோதி உயிரிழந்தார்.

இந்த துயரச் செய்தியை அறிந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொண்டதுடன் உயிரிழந்த திரு வி. ரவிச்சந்திரன் அவர்களின் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து 5 லட்சம் ரூபாய் வழங்கிட உத்தரவிட்டிருந்தார்கள்.

பணியின் போது உயிரிழந்த திருவேற்காடு காவல் நிலைய உதவி ஆய்வாளர் திரு வி. ரவிச்சந்திரன் அவர்களின் மனைவி திருமதி ஜீவா அவர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து 5 லட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கி ஆறுதல் கூறினார்கள்.

இந்த நிகழ்வின்போது, தலைமைச் செயலாளர் திரு மோகன் வர்கீஸ் சுங்கத், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு ஆலோசகர் திருமதி ஷீலா பாலகிருஷ்ணன், இ.ஆ.ப., (ஓய்வு) ஆகியோர் உடனிருந்தனர்.

*******

வெளியீடு: இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9
நாள்: 28.8.2014